அடுத்து என் தொகுதியில் போலீஸ் குவார்ட்டர்ஸ் 3 இருக்கிறது. அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ? ரிட்டையர் ஆன, திரு. ஷெனாய் போன்றவர்கள் எல்லாம் அவற்றைப் பார்த்திருக்கிறார்கள். அந்த குவார்ட்டர்ஸ் பழைய நிலையிலேயே இருக்கிறது. காலையில் அவர்கள் பரேடுக்கு வரவேண்டும். காலையில் எழுந்து வரும்போது, பக்கத்து வீட்டுப் பிள்ளையை மிதிக்கிற நிலைமை. காரணம், குறிப்பிட்ட நேரத்தில்தான் விளக்கை எரிக்க வேண் டும். மற்ற நேரங்களில் அணைத்து விட வேண்டுமென்று வைத் திருக்கிற காரணத்தால், அவர்கள் விரும்புகிற நேரத்தில் கூட அந்த விளக்குகளை எரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இதெல்லாம் சாதாரண குறைகள். அதையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த பட்ஜெட்டுக்கு என்னுடைய அவ நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து ஒன்றை மட்டும் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ நம்பிக்கைக்குப் பிறகு என்ன பேச்சு? அவ நம்பிக்கை என்றால் என்ன அர்த்தம்?

திரு. ப. பொன்னுரங்கம்: நம்பிக்கையில்லையென்று அர்த்தம். நம்பிக்கை இல்லாவிட்டால் அவ நம்பிக்கை தானே. நம்முடைய முதலமைச்சர் ஒரு பாட்டு பாடியிருக்கிறார். எல்லோரும் பாடிய பாட்டுதான் அது. கருத்துள்ள பாட்டு. அப்பொழுது நாம் எல்லாம் சேர்ந்து பாடிய பாட்டு.

'ஏமாறாதே, ஏமாறாதே,

ஏமாற்றாதே, ஏமாற்றாதே...... என்பதுதான் அந்தப் பாட்டு. ஆக, இந்த பட்ஜெட்டைக் காட்டி அருள் கூர்ந்து நீங்கள் ஏமாற்றாதீர்கள், பொது மக்களால் பிற் காலத்தில் ஏமாற வேண்டியிருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

7. ஒழுங்குப் பிரச்சினை

உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே With your kind consent I raise the point of order, பாயின்ட் ஆப் ஆர்டர். நான் இங்கே அவையிலே விதி 246-ன் கீழ் அண்ணா பத்திரிகைக்கு எதிராக உரிமைப் பிரச்சினையை எழுப்ப இருந்தேன். அதில் தீர்ப்புத் தருவதாக ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ் ஆகியிருக்கிறது. அது விதிகளுக்குப் புறம்பானது என் பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய சட்டப் பேரவை விதி 72, செக்ஷன் 250-ஐ அருள் கூர்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

"When a member has with consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whethe a prima facie case of breach of privilege has been made out or not, therein"

அதனுடைய அர்த்தம் உங்களுக்குத் தெளிவாக விளங்கும். இருந்தாலும் நான் சொல்லுகிறேன், இரண்டு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். இதனுடைய அர்த்தம், ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப்படுகிறபோது இந்த சபைக்கு அது எது சம்பந்தமான உரிமைப் பிரச்சினை, அதனுடைய சப்ஜெக்ட் மேட்டர் என்ன என்பதை சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு தான் நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும். ஆனால் நீங்கள், நான் அண்ணா பத்திரிகைக்கு எதிராக உரிமைப் பிரச்சினை எழுப்பி இருக்கிறேன் என்று கூட சொல்லவில்லை. இந்த விதியின் கீழ் உரிமைப் பிரச்சினை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி பத்திரிகைக்காரர்களைக் கேட்டு நான் தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் 250 ஆவது விதியின்படி அது எது சம்பந்தமான பிரிவிலெஜ் என்று சபைக்கு சொல்லப்பட்டு ஆக வேண்டும். அந்த அடிப்படையில் அதை வாசிக்க அனுமதிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பத்திரிகைக்கு எதிராக உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பத்திரிகையினிடத்திலே நான் விளக்கம் கேட்டிருக்கிறேன் அவர்களிடத்தில் இருந்து விளக்கம் வந்த பிறகு, இப்பிரச்சினை எடுத்துக்கொள்ளப் பெறும் என்று சொன்னேன். நீங்கள் சப்ஜக்ட் மேட்டரை இப்போதே சொல்ல ஆரம்பித்தால், அப்புறம் என்ன இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: பிரைமாபேசி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரைமாபேசி இருக்கிறதா என்று நான் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) அதைப் படித்துவிட்டேன். நீங்களும் ஆங்கிலத்தில் படித்தீர்கள் தமிழில் அதற்குப் பொருளும் கூறினீர்கள். அநேகமாக இரண்டும் எனக்குப் புரிகிறது. அந்த வகையிலே இரண்டையும் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் கொடுத்து இருக்கிற உரிமை மீறல் பிரச்சினை சம்பந்தமாக, சம்பந்தப்பட்டவர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களது, விளக்கம் வந்த உடனே இந்த அவையிலே அப்பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பெறும். அது வரையிலே பொறுமையாக இருக்க வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[1980 ஜூலை 7

திரு. அ. ரகுமான்கான் : It is the privilege of the House. That is a different case. You may read out to the House, Otherwise, the House may be in the dark. That is my submission.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய சட்டப் பேரவை விதி 250-ல் கூறப்பட்டுள்ளது. "ஓர் உறுப்பினர், உரிமைப் பிரச்சினை ஒன்றை பேரவைத் தலைவரின் இசைவுடன் எழுப்பினால், பேரவைத் தலைவர் அப் பிரச்சினையை பேரவைக்குப் படித்துக் காட்டி, அதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதனை முடிவு செய்வார்". ஆகவே, உறுப்பினரின் உரிமைப் பிரச்சினை பேரவைத் தலைவரின் இசைவின் கீழ், என்ற கட்டத்திலேதான் நிற்கிறதே தவிர, அந்த இசைவைப் பெறுகிற கட்டத்திற்கு இன்னும் வந்து சேரவில்லை. (குறுக்கீடு) தயவு செய்து நான் முடித்துவிடுகிறேன். ஆகவே இசைவைப் பெறுகின்ற கட்டத்திலே, அந்த இசைவைப் பெறுவதற்காகத்தான் ஒரு குறிப்பிட்ட பத்திரிகையைப் பற்றி இருப்பதால் அதன் கருத்தை அறிந்து விட்டு இசைவு இருக்கிறதா, இல்லையா என்ற பிரச்சினையைக் கொண்டு வருகிறபோது, அதற்குப் பிறகு பேரவைத் தலைவர் அவர்கள் கட்டாயம் படித்துக் காட்டுவார்கள். அப்படிப் படித்துக் காட்டுகிறபோது வாதங்கள் எழுப்ப இடங்கள் இருக்கின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அதைப் பார்க்கின்ற அவசியம் ஏற்படும். இப்போது கன்சன்ட்டே இன்னும் கொடுக்கவில்லை. ஆகவே, கன்சன்ட் கொடுப்பதற்கு முன்னால் கன்சன்ட் கொடுப்பதற்குத் தனக்கு என்ன அடிப்படை நிலைமைகள் தேவைப்படுகின்றன என்பதற்காகத்தான் இந்த நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே கன்சன்ட் நிலை வந்ததற்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தக் கட்டங்கள் வருமே தவிர, இப்போதே வராது, இன்னும் தீர்ப்பும் அளிக்கப்படவில்லை.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளின்படி தாங்கள் சொன்னதும், முன்னவர் சொன்னதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவை. அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் ஒரு பத்திரிகையிலே வருகிற செய்தியும், சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பும் ஒன்றுக்கொன்று மாறாக இருக்குமானால், சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இல்லாத சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை ஊகித்துக்கூட சொல்ல முடியாத ஒரு கருத்து, அச்சிடப்பட்டு வந்திருக்கு

1980 ஜூலை 7] [திரு. க. அன்பழகன்]

மானால், அது உடனடியாக விளக்கம் கேட்டு பதில் கொடுக்க முடியாவிட்டாலும் கூட, சட்டப் பேரவையின் உரிமை என்ற காரணத்தினால் அது உரிமைப் பிரச்சினையாக அவைத் தலைவர் அவர்களாலே கருதப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஆனால் இந்த முதல் பிரச்சினையைப் பொறுத்த வரையில் தாங்கள் எடுத்துக் கொண்ட முடிவுப்படி பதில் கிடைக்கிற வரையில் பொறுத்துக் கொள்வோம். ஆனால் முதல் உரிமை தங்களுக்கே இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10–10]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, தாங்கள் அதைப் படிக்கிறபோதே, அந்த வார்த்தைகளை கவனித்து விட்டு, பேசாமல் இருந்தேன். விளக்கம் பத்திரிகையின் இருந்து வந்த பிறகு எடுக்கப்படும் என்று சொன்னீர்கள். தீர்ப்பு கூறப்படும் என்று சொல்லியிருந்தால், அப்போதே எழுந்து கேட்டு இருப்பேன். இங்கே அவை முன்னவர் அவர்கள் விதிகளைப் படித்துக் காட்டினார்கள். இங்கே ' ப்ரொசீஜர் என்னவென்றால், நாங்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினையை' நீங்களே பார்த்துவிட்டு, அதிலே சில விளக்கங்கள் தேவை என்று நீங்கள் கருதினால், நீங்களே இந்த அவைக்கு வந்து, இந்த மாதிரி ஒரு பிரச்சினை குறித்து ஒரு உரிமைப் பிரச்சினையை ஒரு பத்திரிகை பேரில் உறுப்பினர் ஒருவர் கொடுத்து இருக்கிறார் என்று சொல்லி, அப்படி கொடுத்துள்ள உறுப்பினரிடமே அதிலே ' ப்ரைமா பேசி ' உரிமை மீறல் எந்த வகையில் உள்ளது என்பதை விளக்கக் கோருகிறேன் என்று கேட்பீர்கள், நீங்கள் கொடுக்கிற 5 நிமிடமோ, 10 நிமிடமோ நேரத்தை எடுத்துக் கொண்டு, நாங்கள் சில கருத்துக்களைச் சொல்லி, இன்னின்ன காரணத்தால், ' ப்ரைமா பேசி ' இருக்கிறது என்று சொல்வோம், அப்படிச் சொன்ன பிறகு, நீங்கள் என்ன அனௌன்ஸ் செய்வீர்கள் என்றால், சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு எழுதிக் கேட்டு, விளக்கம் வந்த பிறகு, அதைப் பற்றி என்னுடைய தீர்ப்பைத் தருகிறேன் என்று சொல்வீர்கள். இது தான் ரெகுலர் ப்ரொசீஜர். அது தான் ரூல்சில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தப் ப்ரொசீஜர் மாறாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதால், இந்தத் தடவை அந்தப் பத்திரிகையிடமிருந்து எக்ஸ்பிளனேஷன் வந்த பிறகு, அதில் ' ப்ரைமா பேசி ' உரிமை மீறல் இருக்கிறதா என்று செல் வதற்கு திரு. ரகுமான்கான் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ' ஹியர் ஆப்டர் ப்ரொசீஜர் ' என்கிறபோது, அந்த ' ப்ரீவியஸ் ப்ரொசீஜர் ' கன்டினியூஸ்ஸாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். பேராசிரியர் அவர்களும் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் பத்திரிகை சம்பந்தப்பட்டு இருக்கிற காரணத்தால், அவர்களிடமும் இது குறித்து விளக்கம் கேட்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்களுக்கும் பல பொறுப்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் தான் பத்திரிகைகளிடமிருந்து விளக்கம் கேட்டு விட்டு பதில் அளிக்கலாம் என்று சொன்னேன். நானே ஒரு முடிவு எடுத்து உடனடியாகச் செயல்படுவது, சில வேளைகளில் கடினமான காரியம் என்று கருதுகிறேன். பத்திரிகைகளுக்கும் சில உரிமைகள் இருப்பதால், அந்த வகையிலும் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டு இருக்கிறேன். அதற்கான விளக்கம் அவர்களிடமிருந்து வந்தவுடன் இங்கே விவாதிக்கலாம் என்று இங்கே காலையில் சொன்னேன். திரு. குமரி அனந்தன் உரையைத் தொடங்கலாம்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,..

திரு. துரை முருகன் : அவர்கள் பதில் அனுப்ப ஒரு மாதம் எடுத்துக் கொண்டு விட்டால், பிரச்சினை ' சப் ' என்று போய் விடும்.

Thiru A. RAHUMAN KHAN : On the part of "Anna" Journal, if they refuse to give during the session then the matter becomes infructuous.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பத்திரிகைக்கு எழுதிக் கேட்டால், 24 மணி நேரத்திற்குள் பதில் வந்து விடும். ஆகவே, கவலைப்படத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம். இந்தச் சபையில் இதுவரை நடந்து வந்த நடைமுறை மாண்புமிகு சபாநாயகர் கருத்துப்படி மாறுவது கூடாது என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னது அது தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். புரிந்து கொண்டு இருக்கிறேன். அதற்கு மேல் ஒரு விளக்கமா ? நான் சபையின் நடைமுறைகள் எதையும் மாற்ற வில்லை. தவறு எதுவும் நடக்கவில்லை. சட்ட முறைப்படிதான் எல்லாம் நடக்கிறது. சட்டம் எதுவும் மாற்றப் படவில்லை. இருக்கின்ற நடைமுறையைத்தான் பின்பற்றி வருகிறேன்.

1980 ஜூலை 7]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது. திரு. ரகுமான்கான் கொடுத்துள்ள பிரச்னை ஒரு பத்திரிகை மீது இருந்தாலும், ஒரு நாளிதழ் மீது இருந்தாலும்—எந்த நாளிதழ மீது இருந்தால் என்ன—அந்த உரிமை மீறல் அறிக்கை கொடுத்த உறுப்பினர் விளக்கம் சொல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர்தான், நீங்கள் அந்தப் பத்திரிகைக்கு எழுதிக் கேட்டு விளக்கம் பெற்று, தீர்ப்புக் கூற வேண்டும் அந்தப் ப்ரொசீஜர் பின்பற்றப்படவில்லை என்பதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அமைதியாக இருக்க வேண்டும். உரிமை மீறல் பிரச்னை என்று மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பில் விளக்கமாக எழுதி இருக்கிறார். அவர் எழுதிக் கொடுத்துள்ள எல்லாவற்றையும் அவையில் படித்துக் காட்டிக் கொண்டிருக்க முடியாது. அவையின் உரிமை பாதிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை முதலில் ஆராய்ந்து பார்க்க பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. அதன் பேரில் பத்திரிகையிடம் விளக்கம் கேட்டுள்ளேன். பத்திரிகையிடம் இருந்து விளக்கம் வந்த பிறகு இந்தப் பிரச்னை அவையில் எடுத்துக்கொள்ளப் பெறும். இதில் ஒன்றும் நடைமுறைத் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: இல்லை சார், எப்படி என்று கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நடைமுறையிலே உள்ளதைப் பற்றிச் சொல்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையைப் பற்றி அவரே விளக்கமாக எழுதி இருக்கிறார்கள். அதை வைத்துத்தான் நான் சொன்னேன். சபையிலே இருக்கிற நடைமுறை மாற்றப்படவில்லை. சட்டப்படி சபை நடக்கிறது. அதை பாதுகாப்பதுதான் எனக்கு இருக்கிற வேலை; ஆகவே அது பாதுகாக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ப்ரொசீஜரில் நீங்கள் ஒரு இம்பார்ட்டன்ட் ஸ்டேஜை கட் ஷார்ட் பண்ணுகிறீர்கள். அது இந்த அவையைப் பாதிக்கிறது. இங்கே விளக்கமாகச் சொல்ல வேண்டாம்; அவரே விளக்கமாக எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னீர்கள். அப்படியானால் அதையாவது நீங்கள் இங்கே படிக்க வேண்டும். ஹவுஸ்தான் சுப்ரீம்பாடி; அங்கத்தினருக்கு தம் கருத்தை விளக்கமாகத் தெரிவிக்க வாய்ப்பு வேண்டும்; அதிலே 'ப்ரைமா ஃபேசி' கேஸ் இருக்கிறதா அல்லது இல்லையா என்று பிறகு நீங்கள் சொல்லலாம்.

[1980 ஜூலை 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் இருந்து பதில் வந்தவுடன் அது மீண்டும் சபைக்கு வருகிறது.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் சொல்வதிலிருந்து நான் தெரிந்து கொண்டிருப்பதை, இந்த அவையில் இருக்கிற நண்பர்கள் பலரும் பல்வேறு விதமாகக் கருதிக் கொண்டிருப்பதால், சொல்கிறேன். இன்னும் 'நோட்டீஸ்' எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவைத் தலைவர் மட்டும் தான் அதைப் பற்றித் தெரிந்து, பத்திரிகைக்கு எழுதியிருக்கிறாரே தவிர இந்த அவையில் அந்தப் பிரச்சினை வந்ததாக அவைத் தலைவர் எடுத்துக் கொண்டதாக நான் கருதவில்லை. அவராகவே நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கலாம். இல்லை என்றால் பதில் கிடைத்தவுடனே அவைக்குச் சொல்வார்; இங்கே விரைவில் அதுபற்றி விவாதிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன்.

6. 1980—81 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்—விவாதம்—(தொடர்ச்சி)

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 4 மாத காலத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தைக் குடியரசுத் தலைவர் ஆட்சி நடத்தியபோது பாராளுமன்றத்திலே வைத்தார்; 8 மாதத்திற்கான வரவு-செலவுத் திட்டம் ஏழைகளை எட்டும் வகையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு போடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. ஆக இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சமநீதி நிலையை வழங்கும் வகையில் அமைக்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு இருப்பது அதனைப் படித்துப் பார்க்கும் நேரத்திலும் முன்னவர் அதைப் படித்த நேரத்திலும் நன்கு தெரிந்தது. ''தேசிய பொருளாதாரக் கொள்கைகளைச் செம்மைப்படுத்தி,—' ஐ கோட் '—மாநில அரசுகளுக்கு வலிவூட்டி, மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் '' என்ற பீடிகையோடு தொடருகிறது வரவு செலவுத் திட்டம்.

இந்தியப் பேரரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட வேண்டும்; மக்கள் நல்வாழ்வை நினைந்து செயல்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. பனியின் வெண்மைத் தோலும், கடல் நீரின் கருமைத் தோலும் இந்தியாவில் மனிதனுடைய உடலில் மேல்புறத் தோற்றம் தோன்றுவதாக இருக்கும். அந்த